# மருதம் அகாடமி Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

## மேல்நிலை இரண்டாம் ஆண்டு - தமிழ்

பொதுத் தேர்வு - முக்கிய வினாக்கள்

## இயல் ஒன்று

## தன்னேர் இலாத தமிழ்

### தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல்

**ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி**
**ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள்**
**மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது**
**தன்னேர் இலாத தமிழ்!**

பா வகை : நேரிசை வெண்பா

அணி : பொருள் வேற்றுமை அணி

**குறுவினா**

1. விடியல், வனப்பு - இரு சொற்களையும் ஒருங்கிணைத் துத் தொடர் அமைக்க.
2. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?

**சிறுவினா**

1. 'ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

**நெடுவினா**

1.பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.

**கலைச் சொல் அறிவோம் :**

**Subscription – உறுப்பினர் கட்டணம்**
**Fiction – புனைவு**
**Biography – வாழ்க்கை வரலாறு**
**Archive – காப்பகம்**
**Manuscript – கையெழுத்துப் பிரதி**
**Bibliography – நூல் நிரல்**

உன்னையல்லால் = உன்னை + அல்லால்
விதி : இஈஐ வழி யவ்வும் – உன்னை + ய் + அல்லால்
விதி : உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – உன்னையல்லால்.

செந்தமிழே = செம்மை + தமிழே
விதி : ஈறு போதல் – செம் + தமிழே
விதி : முன்னின்ற மெய் திரிதல் – செந்தமிழே.

**தமிழில் சில தொகைமொழிகள்**

வைகுறு விடியல், கன்னி விடியல், புல்லென் மாலை, நள்ளென் யாமம், காமர் வனப்பு, மாண்கவின் காண்டகு வனப்பு, கவினுறு வனப்பு, தீநீர், நெடுநீர், சின்னீர், பனிநீர், ஒலிவெள்ளருவி, பறைக்குரல்எழிலி,பொய்படுசொல்,நகைக்கூட்டம், ஒவச் செய்தி... இப்படி ஓராயிரம்.

அணி : பொருள் வேற்றுமை அணி

விளக்கம் : இருவேறு பொருள்களுக்கிடையே ஒற்றுமையை முதலில் கூறிப் பின் வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணி எனப்படும்.

உயர்ந்தோர் = உயர் + த் (ந்) + த் + ஓர்
உயர் – பகுதி, த் – சந்தி ; த் (ந் ஆனது விகாரம்)
த் – இறந்தகால இடைநிலை
ஓர் – பலர்பால் வினைமுற்று விகுதி.
ஆர் என்பதன் ஈற்றயலெழுத்தான "ஆ" "ஓ" ஆகத் திரியும் (நன். 353)

ஆங்கவற்றுள் = ஆங்கு + அவற்றுள்
விதி : உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் – ஆங்க் + அவற்றுள்
விதி : உடல்மேல்உயிர்வந்துஒன்றுவதுஇயல்பே – ஆங்கவற்றுள்.



**தெரியுமா?**

| அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்கள் | அணியிலக்கணத்தையும் கூறும் இலக்கண நூல்கள் |
|---|---|
| தண்டியலங்காரம், மாறனலங்காரம், குவலயானந்தம். | தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம். |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# மருதம் அகாடமி Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

**நூல்வெளி**

இக்கவிதை சிற்பி பாலசுப்பிரமணியத்தின் நிலவுப்பூ என்னும் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. கவிஞர், பேராசிரியர், மொழிபெயர்ப்பாளர், இதழாசிரியர் எனப் பன்முகம் கொண்டவர் சிற்பி பாலசுப்பிரமணியம்; பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியவர்; மொழிபெயர்ப்புக்காகவும் ஒரு கிராமத்து நதி என்னும் கவிதை நூலிற்காகவும் இருமுறை சாகித்திய அகாதெமி விருது பெற்றவர். இவருடைய கவிதைகள் ஆங்கிலம், கன்னடம், மலையாளம், மராத்தி, இந்தி ஆகியவற்றில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவர் ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், ஒரு கிராமத்து நதி, பூஜ்யங்களின் சங்கிலி முதலிய பல கவிதை நூல்களை ஆக்கியவர்; இலக்கியச் சிந்தனைகள், மலையாளக் கவிதை, அலையும் சுவடும் உள்ளிட்ட உரைநடை நூல்களையும் எழுதியுள்ளார்; மலையாளத்திலிருந்து கவிதைகளையும் புதினங்களையும் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்; சாகித்திய அகாதெமியின் செயற்குழு உறுப்பினராகவும் இருக்கிறார்.

**தெரியுமா?**

பரலி சு. நெல்லையப்பர் விடுதலைப் போராட்ட வீரர், கவிஞர், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், இதழாளர், பதிப்பாளர் எனப் பன்முகம் கொண்டவர். பாரதியின் கண்ணன் பாட்டு, நாட்டுப்பாட்டு, பாப்பாப்பாட்டு, முரசுப்பாட்டு ஆகியவற்றைப் பதிப்பித்தவர். பாரதி நடத்திய சூரியோதயம், கர்மயோகி ஆகிய இதழ்களில் துணையாசிரியராகவும் லோகோபகாரி, தேசபக்தன் ஆகிய இதழ்களில் துணையாசிரியராகவும் பிறகு ஆசிரியராகவும் பணியாற்றியவர். இவர் நெல்லைத்தென்றல், பாரதி வாழ்த்து, உய்யும் வழி ஆகிய கவிதை நூல்களையும் வ.உ. சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாற்றையும் எழுதியுள்ளார்.

**தெரிந்து தெளிவோம்**

எட்டயபுரம் மன்னர்களின் பரம்பரை வரலாறு பற்றிக் கவிகேசரி சாமி தீட்சிதர் என்பவர் வம்சமணி தீபிகை என்னும் நூலை 1879இல் வெளியிட்டார். அப்பதிப்பைத் திருத்தி வெளியிட ஆசைகொண்ட பாரதி, ஆட்சிசெய்த வெங்கடேசுர எட்டப்பருக்கு 6.8.1919இல் கடிதம் எழுதினார். பலவிதமான குற்றங்களையுடைய அந்நூலை நல்ல இனிய தமிழ்நடையில் அமைத்துத் தருவேன் என்று குறிப்பிட்டார். ஆனால் அவர் ஆசை நிறைவேறவில்லை. வம்சமணி தீபிகை நூலின் மூலவடிவம் மறுபதிப்பாக இளசை மணி என்பவரால் 2008இல் அப்படியே வெளியிடப்பட்டது.

எழுதும்போது ஏற்படும் பிழைகளைக் கீழ்க்காணும் வகைப்பாட்டில் பிரிக்கலாம்.

1. எழுத்துப் பிழை
2. சொற்பொருட்பிழை
3. சொற்றொடர்ப்பிழை
4. பொதுவான பிழைகள் சில

**தமிழாக்கம் தருக.**

1. *Learning is a treasure that will follow its owner everywhere.*
2. *A new language is a new life.*
3. *If you want people to understand you, speak their language.*
4. *Knowledge of languages is the doorway to wisdom.*
5. *The limits of my language are the limits of my world.*

**இலக்கிய நயம் பாராட்டுக.**

முச்சங்கங் கூட்டி
  முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே
  அளப்பரிய பொருள்கூட்டி
சொற்சங்க மாகச்
  சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
  அமைத்த பெருமாட்டி!

–கண்ணதாசன்

**உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.**

தாமரை இலை நீர்போல, கிணற்றுத்தவளைபோல, எலியும்பூனையும்போல, அச்சாணி இல்லாத தேர்போல, உள்ளங்கை நெல்லிக்கனிபோல.

9659838789

## இயல் இரண்டு

### நெடுநல்வாடை- நக்கீரர்

'வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வே றுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோடல்
நீடுதழ்க் கண்ணி நீர் அலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க

பா வகை : நேரிசை ஆசிரியப்பா

**குறுவினா**

1. இனநிரை - பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக.
2.' நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைர மாகிறது' – விளக்கம் தருக.

# மருதம் அகாடமி Youtube channel

**தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789**

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

**சிறுவினா**

1. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?
2. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக

**நெடுவினா**

1. 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலை ப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமை தாசனாருடன் நீங்கள் நட த்திய கற்பனைக் கலந்துரையாடலைத் தொகுத்து எழுதுக .

**மயங் கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக**

1. விலை , விளை , விழை

கார் பருவத்தில் நன்றாக **விளை**ந்ததால் தானியங்களின் **விலை** குறையாமல் இருக்க ஏற்றுமதி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ள **விழை**வதாக அரசு அறிவித்தது.

**கலைச் சொல் அறிவோம்:**

Platform – நடைமேடை
Train Track – இருப்புப்பாதை
Railway Signal – தொடர்வண்டி வழிக்குறி
Ticket Inspector – பயணச்சீட்டு ஆய்வர்
Level Crossing – இருப்புப்பாதையைக் கடக்குமிடம்
Metro Train – மாநகரத் தொடர்வண்டி

திணை : வாகை

வாகைத் திணை - வெற்றி பெற்ற அரசனும் அவனது வீரர்களும் வெற்றியின் அடையாளமாக வாகைப்பூவைச் சூடி வெற்றியைக் கொண்டாடுவது வாகைத் திணை.

துறை : கூதிர்ப்பாசறை

கூதிர்ப்பாசறை - போர்மேற் சென்ற அரசன் குளிர் காலத்தில் தங்கும் படைவீடு.

புதுப்பெயல் = புதுமை + பெயல்

விதி :ஈறுபோதல் – புது + பெயல்

விதி : இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் – புதுப்பெயல்

**நூல்வெளி**

பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு, மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் இயற்றிய நூல் நெடுநல்வாடை. இது பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று ; 188 அடிகளைக் கொண்டது; ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது. இப்பாடலின் பெயர் இருவகையில் பொருள் சிறந்து விளங்குகிறது. தலைவனைப் பிரிந்த தலைவிக்குத் துன்பமிகுதியால் நெடுவாடையாகவும் போர்ப் பாசறையிலிருக்கும் தலைவனுக்கு வெற்றி பெற ஏதுவான நல்வாடையாகவும் இருப்பதால் நெடுநல்வாடை எனும் பெயர் பெற்றது.

**நூல்வெளி**

உத்தம சோழன் (செல்வராஜ்) எழுதிய "முதல்கல்" கதை பாடமாக உள்ளது. தஞ்சைச் சிறுகதைகள் என்னும் தொகுப்பில் இக்கதை இடம் பெற்றுள்ளது. உத்தம சோழன் திருத்துறைப்பூண்டி அருகே தீவாம்மாள்புரத்தைச் சேர்ந்தவர்; மனிதத்தீவுகள், குருவி மறந்த வீடு உள்ளிட்ட சிறுகதைத் தொகுப்புகளையும் தொலைதூர வெளிச்சம், கசக்கும் இனிமை, கனல்பூக்கள் உள்ளிட்ட புதினங்களையும் எழுதியுள்ளார்; "கிழக்கு வாசல் உதயம்" என்ற திங்களிதழைக் கடந்த 12 ஆண்டுகளாக நடத்தி வருகிறார்.

## இயல் மூன்று

## கம்பராமாயணம் -கம்பர்

'துன்பு உளது எனின் அன்றோ
சுகம் உளது? அது அன்றிப்
பின்பு உளது; இடை மன்னும்
பிரிவு உளது என உன்னேல்;
முன்பு உளெம் ஒரு நால்வேம்
முடிவு உளது என உன்னா
அன்பு உள, இனி, நாம் ஓர்
ஐவர்கள் உளர் ஆனோம் (1995)

பா வகை : கலி விருத்தம்

*******************

குகனோடும் ஐவர் ஆனேம்
முன்பு; பின் குன்று சூழ்வான்
மக னொடும் அறுவர் ஆனேம்;
எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகல் அருங் கானம் தந்து,
புதல்வரால் பொலிந்தான் நுந்தை.( 6507)

பா வகை : அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

**திருக்குறள் - வாழ்வியல்**

**இல்வாழ்க்கை**

1. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
   பண்பும் பயனும் அது. (நிரல்நிறை அணி)
2. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
   தெய்வத்துள் வைக்கப் படும்

# மருதம் அகாடமி Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

## செய்ந்நன்றி அறிதல்

1. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
   வானகமும் ஆற்ற லரிது.
2. நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது
   அன்றே மறப்பது நன்று
3. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
   செய்ந்நன்றி கொன்ற மகற்கு

## வெஃகாமை

அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெ ஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்

## வெகுளாமை

1. மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய
   பிறத்தல் அதனான் வரும்
2. தன்னைத்தான் காக்கின் சினம்காக்க ; காவாக்கால்
   தன்னையே கொல்லும் சினம்
3. சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
   ஏமப் புணையைச் சுடும்.

## ஊழ்

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன்
உண்மை அறிவே மிகும்.

### குறுவினா

1. புக்கில், தன்மனை - சிறு குறிப்பு எழுதுக.
2. நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?
3. சங்க காலத்தில் தாய்வழிச் சமூகமுறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை ?
4. ஞாலத்தின் பெரியது எது?

### சிறுவினா

1. சடாயுவைத் தந்தை யாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.
2. "வருபவர் எவராயினும் நன்றி செலுத்து" - இடஞ்சுட்டிப் பொருள் விளக் குக.
3. அன்பும் அறனும் உடைத்தா யின் இல்வாழ்க்கை பண்பும் ப யனும் அது - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.
4. திருவளர்ச்செல்வன் , திருவளர் செல்வன் - இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?

### நெடுவினா

1. 'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணை யாமல் இருந்திருந்தால் கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.
2. செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணை கொண்டு நிறுவுக.

### கலைச் சொல் அறிவோம்:

Lobby – ஓய்வறை: Checkout - வெளியேறுதல்
Tips – சிற்றீகை: Mini meals - சிற்றுணவு

பொலிந்தான் = பொலி + த் (ந்) + த் + ஆன்

பொலி – பகுதி; த் – சந்தி (ந் ஆனது விகாரம்); த் – இறந்தகால இடைநிலை; ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி

**புணர்ச்சி விதி**

அருங்கானம் = அருமை + கானம்;
விதி : ஈறு போதல் – அரு + கானம்;
விதி : இனமிகல் – அருங்கானம்

**நூல்வெளி**

கம்பராமாயணம் பல்வேறுவிதமான பண்புகளை அடிப்படையாகக் கொண்ட பாத்திரங்களால் படைக்கப்பட்டிருக்கிறது. இராமன் அனைத்து உயிர்களையும் கீழ் மேல் எனக் கருதாது சமமாக அன்பு காட்டும் பகுதிகள் பாடமாக இடம்பெற்றுள்ளன. அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், யுத்த காண்டம் ஆகியவற்றிலிருந்து குகன், சடாயு, சவரி, சுக்ரீவன், வீடணன் ஆகியோரைப் பற்றிய பாடல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. உடன்பிறப்பியப் பண்பையும் அன்பையும் வெளிப்படுத்தும் பாடல்கள் இவை. இந்நூலை இயற்றியவர் கம்பர். இதற்குக் கம்பர் இராமாவதாரம் என்னும் பெயர் சூட்டினார். கம்பனது கவிநலத்தின் காரணமாக இது "கம்பராமாயணம்" என்றே அழைக்கப்படுகிறது. கம்பரது காலம் 12ஆம் நூற்றாண்டு. எழுதப்பட்ட காலம்தொட்டு மக்கள் இலக்கியமாகப் போற்றப்படுவதற்குக் கவிச்சக்கரவர்த்தி கம்பனின் கவிநலமே காரணம்.

**தெரிந்து தெளிவோம்**

| | |
|---|---|
| அனயம் | – நிறைவானது |
| எச்சௌந்தவன் | – ஏழை எளியவன். |
| கீழத்தார் | – புன்செய்யின் ஒரு பகுதி |
| கொராமுனுசு | – கிராம நிர்வாக அலுவலர் |
| கொடவாங்கல் | – கொடுக்கல் வாங்கல் |
| திருணை | – திண்ணை |
| தெகஞ்சத | – முடிந்ததை |
| பிஞ்சை | – புன்செய் |
| ரோசி | – உரசுதல் |
| வாந்தக்கமாக | – இணக்கமாக |
| வெதப்பெட்டி | – விதைப்பெட்டி |
| வெள்ளங்காட்டி | – விடியற்காலை |
| வேண்டாற | – வேண்டாத |
| திருகை | – மாவு அரைக்கும் கல் |
| குறுக்கம் | – சிறிய நிலப்பரப்பு |
| கடகம் | – ஓலைப்பெட்டி |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# மருதம் அகாடமி Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

நூல்வெளி

'உரிமைத்தாகம்' என்னும் இச்சிறுகதை 'பூமணி சிறுகதைகள்' என்னும் தொகுப்பில் உள்ளது. பூமணி, கரிசல் எழுத்தாளர்களில் ஒருவர். பூ. மாணிக்கவாசகர் என்ற தனது பெயரைச் சுருக்கிப் பூமணி என்ற பெயரில் எழுதி வருகிறார். தமிழ்நாடு அரசின் கூட்டுறவுத்துறையில் துணைப்பதிவாளராகப் பணியாற்றியவர். அறுப்பு, வயிறுகள், ரீதி, நொறுங்கல்கள் ஆகியன இவரது சிறுகதைத் தொகுப்புகள். வெக்கை, பிறகு, அஞ்ஞாடி, கொம்மை உள்ளிட்ட புதினங்களை எழுதியுள்ளார். கருவேலம்பூக்கள் என்ற திரைப்படத்தை இயக்கியுள்ளார். அஞ்ஞாடி என்னும் புதினத்திற்காக 2014இல் சாகித்திய அகாதெமி விருது பெற்றுள்ளார்.

**இலக்கிய நயம் பாராட்டுக.**

*பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளி*
*பிறமொழிக்கு சிறப்பளித்த பிழையை நீக்க*
*ஊற்றெடுத்தே அன்புரையால் உலுங்க வைத்திவ்*
*உலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ?*
*கற்றுணர்ந்தே அதன்இனிமை காண்பாய் என்று*
*கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்*
*தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்து விட்ட*
*தெய்வக்கவி பாரதிஓர் ஆசான் திண்ணம்.*

– நாமக்கல் கவிஞர்

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" எனப் பாரதியாரும்,
"வள்ளுவனைப் பெற்றதால்
பெற்றதே புகழ் வையகமே" - எனப் பாரதிதாசனும் புகழ்ந்து பாடியுள்ளனர்.

| பால் | அதிகாரம் - எண்ணிக்கை | இயல் - எண்ணிக்கை | இயல்களின் பெயர்கள் |
|---|---|---|---|
| அறம் | 38 | 4 | பாயிரவியல் (04)<br>இல்லறவியல் (20)<br>துறவறவியல் (13)<br>ஊழியல் (01) |
| பொருள் | 70 | 3 | அரசியல் (25)<br>அமைச்சியல் (32)<br>ஒழிபியல் (13) |
| இன்பம் | 25 | 2 | களவியல் (07)<br>கற்பியல் (18) |
| | 133 | 09 | |

## இயல் நான்கு

## இதில் வெற்றிபெற -சுரதா

**விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற**
**வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு;**
**மண்வேறு; மண்ணோடு கலந்தி ருக்கும்**
**மணல்வேறு; பனித்துளியும் மழையும் வேறு;**
**புண்வேறு; வீரர்களின் விழுப்புண் வேறு;**
**புகழ்வேறு; செல்வாக்கு வேறு; காணும்**
**கண்வேறு; கல்விக்கண் வேறு; கற்றார்**
**கவிநடையும் உரைநடையும் வேறு வேறு**

**பா வகை : எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**

### குறுவினா

1. வசனம், கவிதை வேறுபாடு தருக.
2. அக்காலத்துக் கல்விமுறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?

### சிறுவினா

1. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?
2. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.
3. ஒரு விகற்பம், பல விகற்பம் என்றால் என்ன?

### நெடுவினா

1. பண்டைக்காலக் கல்வி முறை யில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.
2. 'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' – இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை ?

### கலைச் சொல் அறிவோம்:

Arrival - வருகை_ Passport - கடவுச்சீட்டு
Departure - புறப்பாடு Visa – நுழைவு இசைவு
Conveyor Belt – ஊர்திப்பட்டை
Domestic Flight – உள்நாட்டு வானூர்தி
Take Off – வானூர்தி கிளம்புதல்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# மருதம் அகாடமி Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

## தெரிந்து தெளிவோம்

| | |
|---|---|
| வித்தியாரம்பம் | – கல்வித் தொடக்கம் |
| வித்தியாப்பியாசம் | – கல்விப் பயிற்சி |
| உபாத்தியாயர் | – ஆசிரியர் |
| அக்ஷராப்பியாசம் | – எழுத்துப் பயிற்சி |
| கீழ்வாயிலக்கம் | – பின்ன எண்ணின் கீழ்த்தொகை |
| மேல்வாயிலக்கம் | – பின்ன எண்ணின் மேல்தொகை |
| குழிமாற்று | – பெருக்கல் வாய்பாடு |
| சீதாள பத்திரம் | – தாழை மடல் |
| நவத்வீபம் | – வங்காளத்தில் உள்ள ஓர் ஊர் |

## வித்தியாரம்பம்

முதன்முதலில் ஐந்தாம் பிராயத்தில் வித்தியாப்பியாசம் செய்யும்பொழுது தாய் தந்தையர் பிள்ளைகளை ஆசிரியர்களிடம் அடைக்கலமாகக் கொடுத்து வந்தார்கள்.

## மையாடல்

சுவடிகளிலுள்ள எழுத்துக்கள் செவ்வனே தெரிவதற்காகச் சுவடியில் வசம்பு, மஞ்சள், மணத்தக்காளியிலைச்சாறு அல்லது ஊமத்தையிலைச்சாறு, மாவிலைக்கரி, தர்ப்பைக்கரி முதலியவற்றைக் கூட்டிச் செய்த மையை அதில் தடவுவார்கள். அந்த மை

'ஐயாண் டெய்தி மையாடி அறிந்தார் கலைகள்' என்பது **சிந்தாமணி.**

மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்
மிஞ்சப் புகட்ட மிகவளர்ந்தாய் – தமிழ்விடு தூது

## நூல்வெளி

இப்பாடப்பகுதி உயிர்மீட்சி என்னும் தலைப்பில் தொகுக்கப்பட்ட உ.வே.சா.வின் இலக்கியக் கட்டுரைகளிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளது. 'தமிழ்த் தாத்தா' என அழைக்கப்பெற்ற உ.வே.சா. இணையற்ற ஆசிரியர்; புலமைப் பெருங்கடல்; சிறந்த எழுத்தாளர்; பதிப்பாசிரியர்; பழந்தமிழ் இலக்கியங்களைத் தேடித்தேடி அச்சில் பதிப்பிக்க அரும்பாடுபட்டவர். 'மகாமகோபாத்தியாய,' 'திராவிட வித்தியா பூஷணம்', 'தாக்ஷிணாத்திய கலாநிதி' உள்ளிட்ட பட்டங்களைப் பெற்றுள்ளவர்; கும்பகோணம் அரசு கலைக்கல்லூரியிலும் சென்னை மாநிலக் கல்லூரியிலும் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றியவர். 1932இல் சென்னைப் பல்கலைக்கழகத்தினால் 'டாக்டர்' பட்டம் பெற்ற பெருமைக்குரியவர். அவரது திருவுருவச் சிலை, சென்னை மாநிலக் கல்லூரியில் வங்கக்கடலை நோக்கி நிற்கும் வண்ணம் நிறுவப்பட்டுள்ளது. சென்னையில் திருவான்மியூரில் இவர் பெயரால் உ. வே. சா. நூலகம் அமைந்துள்ளது.

## நூல்வெளி

இப்பாடப்பகுதி, கவிஞர் சுரதாவின் 'துறைமுகம்' என்னும் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. உவமைக் கவிஞர் என்று சிறப்பிக்கப்படும் 'சுரதா'வின் இயற்பெயர் இராசகோபாலன். அப்பெயரைப் பாரதிதாசன்மீது கொண்ட பற்றுதலால் சுப்புரத்தினதாசன் என்று மாற்றி, அதன் சுருக்கமான சுரதா என்னும் பெயரில் மரபுக் கவிதைகள் எழுதினார்; முழுக்க முழுக்கக் கவிதைகளையே கொண்ட காவியம் என்ற இதழை நடத்தியதோடு இலக்கியம், விண்மீன், ஊர்வலம் போன்ற இலக்கிய ஏடுகளையும் நடத்தியுள்ளார்; "தேன்மழை, துறைமுகம், மங்கையர்க்கரசி, அமுதும் தேனும்" உள்ளிட்ட பல நூல்களைப் படைத்துள்ளார். இவர் தமிழக அரசின் கலைமாமணி விருது, பாரதிதாசன் விருது, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இராசராசன் விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றவர்.

*திணை:* **பாடாண்.**

**பாடாண் திணை** – ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணையாகும்.

*துறை:* பரிசில் துறை

**பரிசில் துறை** – பரிசு வேண்டி வாயிலில் நிற்பது.

## புணர்ச்சி விதி

எத்திசை = எ + திசை

விதி : இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் – எத்திசை.

## வெண்பா அடிவரையறை

- இரண்டடி வெண்பா – குறள்வெண்பா
- மூன்றடி வெண்பா – நேரிசை, இன்னிசைச் சிந்தியல் வெண்பா
- நான்கடி வெண்பா – நேரிசை வெண்பாவும் இன்னிசை வெண்பாவும்
- நான்கடிமுதல் பன்னிரண்டடிவரை – பஃறொடை வெண்பா
- பதின்மூன்றடி முதல் அதற்கும் மேற்பட்ட அடிகள்வரை – கலிவெண்பா

# மருதம் அகாடமி Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

**இன்னிசை வெண்பா**

நேரிசை வெண்பாவில் இரண்டாமடியில் தனிச்சீர் வரும். தனிச்சீரில்லாமல் நான்கு சீரோடு அமைக்கப்படுபவை இன்னிசை வெண்பா.

**சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.**

எ.கா. பலகை

பலகையால் ஆன மேசையில் உணவு உண்டனர்.

பல கைகள் ஒன்றிணைந்து வெற்றியைத் தமதாக்கின.

1. தாமரை 2. கோவில்
3. வெங்காயம் 4. தலைமை

## இயல் ஐந்து

**புறநானூறு – ஔவையார்**

**அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென,**
**வறுந்தலை உலகமும் அன்றே ; அதனால்**
**காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை;**
**மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்**
**மழுவுடைக் காட்டகத்து அற்றே**
**எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே . (206)**

**பா வகை : நேரிசை ஆசிரியப்பா**

**தெய்வமணிமாலை - இராமலிங்க அடிகள்**

**ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற**
**உத்தமர்தம் உறவுவேண்டும்**
**உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்**
**உறவுகல வாமைவேண்டும்**
**பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை**
**பேசா திருக்கவேண்டும்**
**பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்**
**பிடியா திருக்கவேண்டும்**

பா வகை : பன்னிருசீர்க் கழிநெ டிலடி ஆசிரிய விருத்தம்

**குறுவினா**

1. கலிவிழா , ஒலிவிழா – விளக்கம் தருக.
2.'பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்' – தொடரில் உள்ள முரண் நயத்தைக் குறிப்பிடுக.

**சிறுவினா**

1. பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞான சம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்?
2. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

**நெடுவினா**

1. "கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன" – இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க.
2. சென்னையில் உள்ள மயிலாப்பூர், கந்த கோட்டப் பகுதிகள் செய்யுளில் எவ்விதம் காட்சிப்படுத்தப்படுகின்றன?

**கலைச் சொல் அறிவோம்:**

Affidavit – ஆணையுறுதி ஆவணம்
Allegation – சாட்டுரை Conviction - தண்டனை
Jurisdiction – அதிகார எல்லை Plaintiff – வாதி

உணர்த்துகின்றன. இன்று சென்னையின் ஒரு பகுதியாக விளங்கும் மயிலாப்பூர், கி.பி.(பொ.ஆ.) 2ஆம் நூற்றாண்டில் 'தாலமி' என்பவரால் 'மல்லியர்பா' எனும் துறைமுகமாகச் சுட்டப்பட்டுள்ளது.

1646ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி இந்நகரின் மக்கள்தொகை 19,000 ஆகும். இவ்வளர்ச்சியினை அறிந்தே 1688இல் சென்னை நகராட்சி உருவாக்கப்பட்டது.

**கன்னிமாரா நூலகம்:** 1860இல் அருங்காட்சியகத்தின் அங்கமாகத் தொடங்கப்பட்ட இந்நூலகம், இந்தியாவின் முதல் பொது நூலகமாகும்.

மருதம் அகாடமி YouTube Channel 9659838789



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# மருதம் அகாடமி Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

## உறுப்பிலக்கணம்

**நினைக்கின்ற** = நினை + க் + கின்று + அ
நினை – பகுதி; க் – சந்தி; கின்று – நிகழ்கால இடைநிலை; அ – பெயரெச்ச விகுதி.

**வைத்து** = வை + த் + த் + உ
வை – பகுதி; த் – சந்தி; த் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி.

**பேசுவார்** = பேசு + வ் + ஆர்
பேசு – பகுதி; வ் – எதிர்கால இடைநிலை; ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

## புணர்ச்சி விதி

**உள்ளொன்று** = உள் + ஒன்று

விதி : 'தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்' – உள்ள் + ஒன்று

விதி : 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' – உள்ளொன்று.

**ஒருமையுடன்** = ஒருமை + உடன்

விதி : 'இஈஐவழி யவ்வும்' – ஒருமை + ய் + உடன்

விதி : 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' – ஒருமையுடன்.

## புணர்ச்சி விதி

பூம்பாவாய் = பூ + பாவாய்

விதி: பூப்பெயர்முன் இனமென்மையும் தோன்றும் – பூம்பாவாய்

## உறுப்பிலக்கணம் :

**கண்டான்** = காண்(கண்) + ட் + ஆன்

காண் – பகுதி (கண் எனக் குறுகியது விகாரம்)

ட் – இறந்தகால இடைநிலை

ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி

**அமர்ந்தான்** = அமர் + த்(ந்) + த் + ஆன்

அமர் – பகுதி

த் – சந்தி (ந் ஆனது விகாரம்)

த் – இறந்தகால இடைநிலை.

ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

| மயிலாப்பூர் சிறப்புகள்: | மயிலைப் பதிகத்தில் காணப்பெறும் விழாக்கள் |
|---|---|
| 1. மடலார்ந்த தெங்கின் மயிலை | 1. ஐப்பசி – ஓண விழா |
| 2. இருளகற்றும் சோதித் தொன்மயிலை | 2. கார்த்திகை – விளக்குத் திருவிழா |
| 3. கற்றார்கள் ஏத்தும் கபாலீச்சரம் | 3. மார்கழி – திருவாதிரை விழா |
| 4. கண்ணார் மயிலைக் கபாலீச்சரம் | 4. தை – தைப்பூச விழா |
| 5. கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சரம் | 5. மாசி – கடலாட்டு விழா |
| 6. மங்குல் மதிதவழும் மாடவீதி மயிலாப்பூர் | 6. பங்குனி – பங்குனி உத்திர விழா |
| 7. ஊர்திரை வேலை உலாவும் உயர்மயிலை | |

## உறுப்பிலக்கணம்

**செய்த** – செய் + த் + அ, செய் – பகுதி, த் – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி

**சாற்றி** – சாற்று + இ, சாற்று – பகுதி, இ – வினையெச்ச விகுதி

## புணர்ச்சி விதி

**பெருங்கடல்** – பெருமை + கடல்

விதி : 'ஈறுபோதல்' – பெரு + கடல்

விதி : 'இனமிகல்' – பெருங்கடல்

### நூல்வெளி

பாடல்வைப்பு முறையில் பாடல் எண்ணிற்கு ஏற்பத் திணைகள் வரிசையாக வைத்துத் தொகுக்கப்பட்ட நூல் அகநானூறு. இது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. இந்நூல் மூன்று பிரிவுகளை உடையது. களிற்றியானைநிரையில் 120, மணிமிடை பவளத்தில் 180, நித்திலக்கோவையில் 100 எனப் பாடல்கள் உள்ளன. அகப்பாடல்கள் மட்டுமே பாடியவர்களுள் ஒருவர் அம்மூவனார்; நெய்தல் திணை பாடல்களைப் பாடுவதில் வல்லவர். இவரின் பாடல்கள் எட்டுத்தொகையில் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, ஐங்குறுநூறு ஆகியவற்றிலும் தொகுக்கப்பெற்றுள்ளன.

# மருதம் அகாடமி Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy


**நூல்வெளி**

தோப்பில் முகமது மீரான் எழுதிய 'ஒரு குட்டித் தீவின் வரைபடம்' என்ற சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்ற சிறுகதை இது. தோப்பில் முகமது மீரான் கன்னியாகுமரி மாவட்டம் தேங்காய்ப்பட்டணம் எனும் சிற்றூரில் 1944இல் பிறந்தார். இவர் தமிழிலும், மலையாளத்திலும் படைப்பவர். புதினம், சிறுகதை போன்ற பல்வேறு இலக்கியத் தளங்களில் இயங்கியவர். இவர் எழுதிய 'சாய்வு நாற்காலி' எனும் புதினம் 1997இல் சாகித்திய அகாதெமி விருது பெற்றுள்ளது. துறைமுகம், கூனன் தோப்பு ஆகிய படைப்புகள் தமிழக அரசின் விருது பெற்றுள்ளன.

**தெரியுமா?**

**உவமையும் படிமமும்**

தொல்காப்பியர் உவமை ஒன்றையே அணியாகக் கூறினார். காட்சி தருகிற உவமைகள், காட்சி தரா வெறும் உவமைகள் என இரு பிரிவாக உவமைகளைப் பிரிக்கலாம். சங்க இலக்கியப் பாடல்களில் பெரும்பாலும் உவமைகளின் வழியே சொல்லவந்த கருத்தை மேலும் அழகுபடக் கூறுவர். சங்க இலக்கியங்கள் பெரும்பாலும் காட்சி தரும் உவமைகளையே ஆண்டுள்ளன. படிமம் என்பது உவமையினாலும் அமைவது. படிமம், காட்சி தரும் உத்தி என்பதால் காட்சி தரும் உவமைகளை மட்டுமே அது பயன்படுத்திக் கொள்கிறது. அந்த வகையில் உவமைக் கோட்பாடு, படிமத்திற்குத் தோற்றுவாயாக இருக்கிறது. படிமச் சிந்தனை, இவ்வகையில் நம்மிடம் இருந்த ஒன்றுதான்; புதியதாக மேலை நாட்டிலிருந்து பெற்றுக் கொண்டதன்று.

### தமிழாக்கம் தருக.

1. *Learning is a treasure that will follow its owner everywhere.*
2. *A new language is a new life.*
3. *If you want people to understand you, speak their language.*
4. *Knowledge of languages is the doorway to wisdom.*
5. *The limits of my language are the limits of my world.*

### உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.

தாமரை இலை நீர்போல, கிணற்றுத்தவளைபோல, எலியும்பூனையும்போல, அச்சாணி இல்லாத தேர்போல, உள்ளங்கை நெல்லிக்கனிபோல.

மருதம் அகாடமி YouTube Channel 9659838789

### கலந்துரையாடல்

உலகப் புவி நாளை (ஏப்ரல் 22.) முன்னிட்டுச் சூழலியலாளர்கள் பங்குபெறும் கலந்துரையாடல்

### மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

1. தலை, தளை, தழை
2. கலை, களை, கழை
3. அலை, அளை, அழை

எ.கா. விலை, விளை, விழை

## இயல் ஆறு

## சிலப்பதிகாரம் - புகார்க் காண்டம்

- இளங்கோவடிகள்

**இசைக்கருவிகள் ஒலித்த முறை**

குழல்வழி நின்றது யாழே, யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே, தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே, முழவொடு
கூடி நின்று இசைத்தது ஆமந்திரிகை (95 - 142)

பா வகை : ஆசிரியப்பா

## திருக்குறள்

**அறிவு உடைமை**

1. அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்அழிக்கல் ஆகா அரண்.
2. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.
(சொற்பொருள் பின்வரும் நிலையணி)
3. எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்
4. எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்

**சிற்றினம் சேராமை**

நல்லினத்தின் ஊங்கும் துணை யில்லை ; தீயினத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்.

**வினைத்திட்பம்**

1. வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற
2. சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்

மருதம் அகாடமி Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

3. **உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து**

## தூது

**கடன்அறிந்து காலம் கருதி இடன்அறிந்து**
**எண்ணி உரைப்பான் தலை**

## உட்பகை

**வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக**
**கேள்போல் பகைவர் தொடர்பு**

## சூது

**பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்**
**கழகத்துக் காலை புகின்**

## குறுவினா

1. ஒருமுக எழினி, பொருமுக எழினி – குறிப்பு எழுதுக.
2. பெருந்தேர் – புணர்ச்சி விதி கூறுக.
3. நஞ்சுண்பவர் என வள்ளுவர் யாரை இடித்துரைக்கிறார்?
4. நீங்கள் படித்ததில் பிடித்த குறளை எழுதி, காரணத்தைக் குறிப்பிடவும்.
5. உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து – இக்குறட்பாவின் உவமையைப் பொருளோடு பொருத்துக.
6. கீழ்நீர்க் குளித்தானைத் தீத்துரீஇ யற்று – பொருள் கூறுக.

## சிறுவினா

1. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.
2. ஏதேனும் இரண்டு மெய்ப்பாடுகள் தோன்றுவதற்கான சூழ்நிலையைக் கற்பனையாகப் படைக்க.
3. அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார் – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.
4. சூதும் கள்ளும் கேடு தரும் – திருக்குறள் வழி விவரிக்க.
5. அறிவின் மேன்மை பற்றித் திருக்குறள் வழி நீவிர் கருதுவன யாவை?

## நெடுவினா

1. மகாநடிகரை க் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.
2. அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணை நிற்கும் என்பதை வள்ளுவம் வழி நின்றுநிறுவுக.
3. உங்கள் ஊர்ப் பகுதியில் வாழும் கலைஞர் ஒருவரை நேரில் பார்த்த அனுபவத்தை விவரித்துக் கட்டுரையாக்குக.

## கலைச் சொல் அறிவோம்:

Artist – கவின்கலைஞர் Cinematography – ஒளிப்பதிவு
Animation – இயங்குபடம் Sound Effect – ஒலிவிளைவு
Newsreel – செய்திப்படம்
Multiplex Complex – ஒருங்கிணைந்த திரையரங்க வளாகம்

நாடகங்களை அப்படியே திரைப்படமாக எடுப்பது வழக்கம். நாடகம் என்பது ஒரு காட்சியை ஒற்றைக் கோணத்தில் மட்டும் நேரிடையாகக் காண்பது. இதனால்தான் நாடகத்தை ஒற்றைக் கோணக்கலை (*single dimension art*) எனக் கூறுவர். நாடகங்களின் காலத்தில் ஒலிபரப்புக் கருவிகள் இல்லாததால் வசனங்களை



**தெரியுமா?**

**யாழின் வகைகள்**
21 நரம்புகளைக் கொண்டது பேரியாழ்
17 நரம்புகளைக் கொண்டது மகரயாழ்
16 நரம்புகளைக் கொண்டது சகோடயாழ்
7 நரம்புகளைக் கொண்டது செங்கோட்டியாழ்

**இலக்கணக் குறிப்பு**

ஆடலும் பாடலும் – எண்ணும்மை
தொல்நெறி – பண்புத்தொகை

**உறுப்பிலக்கணம்**

தொழுதனர் = தொழு + த் + அன் + அர்
தொழு – பகுதி; த் – இறந்தகால இடைநிலை; அன் – சாரியை; அர் – படர்க்கைப் பலர்பால் வினைமுற்று விகுதி.

**புணர்ச்சி விதி**

தலைக்கோல் = தலை + கோல்
விதி : இயல்பினும்விதியினும்நின்றஉயிர்முன் கசதப மிகும் – தலைக்கோல்.

**மருதம் அகாடமி** Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

சிலப்பதிகாரத்திலுள்ள அரங்கேற்று காதையின் ஒருபகுதி பாடமாக வைக்கப்பட்டுள்ளது. தமிழரின் கலை, நாகரிகம், பண்பாடு முதலானவற்றை உள்ளடக்கிய கருவூலமாகச் சிலப்பதிகாரம் திகழ்கிறது. அரசகுடி அல்லாதவர்களைக் காப்பியத்தின் தலைமக்களாக வைத்துப் பாடியதால் இது 'குடிமக்கள் காப்பியம்' எனப்படுகிறது. புகார், மதுரை, வஞ்சிக் காண்டங்கள் முறையே சோழ, பாண்டிய, சேர மன்னர்களைப் பற்றியவை என்பதால் 'மூவேந்தர் காப்பியம்' எனவும் அழைக்கப்படுகிறது. முதன் முதலாகப் பெண்ணை முதன்மைப் பாத்திரமாகக் கொண்டு, அவள் அரசனை எதிர்த்து வழக்காடியதைப் பாடியதால் 'புரட்சிக் காப்பியம்' எனப்படுகிறது; இயல், இசை, நாடகம் ஆகிய மூன்று கூறுகளும் இடம்பெற்றுள்ளதால் 'முத்தமிழ்க் காப்பியம்' எனப்படுகிறது. செய்யுளாகவும் பாடலாகவும் உரைநடையாகவும் பாடப்பட்டுள்ளதால் இது 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' எனப்படுகிறது. மேலும், இந்நூல் 'பொதுமைக் காப்பியம்', 'ஒற்றுமைக் காப்பியம்', 'வரலாற்றுக் காப்பியம்' எனவும் அழைக்கப்படுகிறது. சிலப்பதிகாரத்தின் கதைத் தொடர்ச்சி மணிமேகலையில் காணப்படுவதால் இவை இரண்டும் 'இரட்டைக் காப்பியங்கள்' என அழைக்கப்படுகின்றன. சிலப்பதிகாரத்தை இயற்றியவர் இளங்கோவடிகள். 'சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்' என்று பாரதி குறிப்பிடுகிறார். வரந்தரு காதையில் இளங்கோவடிகள் தன்னைப்பற்றிய குறிப்பைத் தருகையில் தான் செங்குட்டுவன் தம்பி என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்.

## உறுப்பிலக்கணம்.

நகை = நகு + ஐ
நகு – பகுதி (நகை ஆனது விகாரம்)
ஐ – தொழிற்பெயர் விகுதி.

மருட்கை = மருள் + கை
மருள் – பகுதி ('ள்' 'ட்' ஆனது விகாரம்)
கை – தொழிற்பெயர் விகுதி.

வெகுளி = வெகுள் + இ
வெகுள் – பகுதி
இ – தொழிற்பெயர் விகுதி.

"என்னைப் போல் சிவாஜி நடிப்பார் . ஆனால் என்னால்தான் சிவாஜிபோல் நடிக்க முடியாது"

– மார்லன் பிராண்டோ (ஹாலிவுட் நடிகர்)

பல நாடகங்களில் அதிக வேலையுள்ள பெரும் பாத்திரங்களை ஏற்று நான் நடித்திருக்கிறேன். ஆனாலும், இந்த கட்டபொம்மனில் எனக்கு இயற்கையாக எழும் உணர்ச்சி நாடக முடிவில் எத்தகைய களைப்பை, சிரமத்தை உண்டாக்குகின்றது என்பதை நினைக்க எனக்குப் பயமாகவே இருக்கிறது. என்றாலும் எனது குழுவினர்களோடு நாடக நாள்களில் ஒன்றுபட்டுச் செயல்படுவதில் காணும் இன்பமும், மக்களின் பாராட்டுதலை நேருக்குநேர் பெறும் வாய்ப்பும், எனக்கு எதிலும் பெற முடியாத ஒரு தனி மகிழ்ச்சியைத் தருகிறதென்ற உண்மை ஒன்றே எனக்குக் கிடைக்கும் பெரும் ஆறுதலாகும்.

–நடிகர் திலகம் சிவாஜிகணேசன்

## சிவாஜிகணேசன் பெற்ற விருதுகள்

- ஆப்பிரிக்க – ஆசியத் திரைப்பட விழாவில் (கெய்ரோ) சிறந்த நடிகருக்கான விருது
- கலைமாமணி விருது
- பத்ம ஸ்ரீ விருது (தாமரைத் திரு)
- பத்ம பூஷன் விருது (தாமரை அணி)
- செவாலியர் விருது
- தாதாசாகெப் பால்கே விருது

## காப்பியத்தைக் குறிக்கும் பிறபெயர்கள்

பொருட்டொடர்நிலைச் செய்யுள், கதைச் செய்யுள், அகலக்கவி, தொடர்நடைச் செய்யுள், விருத்தச் செய்யுள், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள், மகாகாவியம்.

| | | |
|---|---|---|
| காதை | – | சிலப்பதிகாரம், மணிமேகலை |
| சருக்கம் | – | சூளாமணி, பாரதம் |
| இலம்பகம் | – | சீவக சிந்தாமணி |
| படலம் | – | கந்தபுராணம், கம்பராமாயணம் |
| காண்டம் | – | சிலப்பதிகாரம், கம்பராமாயணம் |

வடமொழியில் 'காவ்யதரிசம்' என்ற நூலைத் தழுவித் தமிழில் எழுதப்பட்ட அணியிலக்கண நூல், 'தண்டியலங்காரமாகும்'. இந்நூலில் பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என்று இருவகையாகப் பிரிக்கப்பட்டுக் காப்பிய இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

"பாவிகம் என்பது காப்பியப் பண்பே"

(தண்டி. நூற்பா. 89)

## சிறுகாப்பியம்

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கனுள் ஒன்றோ இரண்டோ குறைந்து வருவது சிறுகாப்பியம் ஆகும்.

## பாவிகம்

காப்பியத்தின் பண்பாகப் 'பாவிகம்' என்பதைத் தண்டியலங்காரம் குறிக்கின்றது. காப்பியத்தில் கவிஞன் வலியுறுத்த விரும்பும் அடிப்படைக் கருத்தினையே பாவிகம் என்பர். "பிறனில் விழைவோர் கிளையொடுங் கெடுப" என்பது கம்பராமாயணத்தின் பாவிகம். "அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர், ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்" என்பது சிலப்பதிகாரத்தின் பாவிகம்.

# மருதம் அகாடமி Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

எ.கா. பொருள்தொடர்நிலை – சிலப்பதிகாரம், கம்பராமாயணம்

சொல்தொடர்நிலை – அந்தாதி இலக்கியங்கள்

✓ விருத்தம் என்னும் ஒரேவகைச் செய்யுளில் அமைந்தவை சீவக சிந்தாமணி, கம்பராமாயணம்.

✓ பாட்டும் உரைநடையும் கலந்து பல்வகைச் செய்யுள்களில் அமைந்தது சிலப்பதிகாரம்.

**பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க.**

எ.கா. களம், கலம்.

போர்க்களத்தில் புண்பட்ட வீரர்களுக்கு கலத்தில்நீர் தரப்பட்டது.

வலம், வளம்.

ஆற்றின் வலப்புறம் உள்ள வயல்கள் நீர்வளத்தால் செழித்திருந்தன.

1. புல் – புள்
2. உழை – உளை
3. கான் – காண்
4. ஊண் – ஊன்
5. தின்மை – திண்மை

**இலக்கிய நயம் பாராட்டுக.**

அந்தியிருளாற் கருகும் உலகு கண்டேன்
அவ்வாறே வான் கண்டேன், திசைகள் கண்டேன்
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்
எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ?

பாரதிதாசன்

## இயல் ஏழு

## புறநானூறு -பிசிராந்தையார்

காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே;
மாநிறைவு இல்லதும், பல்நாட்கு ஆகும்;
நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,
வாய்புகுவதனினும் கால்பெரிது கெடுக்கும்;

**பா வகை : நேரிசை ஆசிரியப்பா**

### குறுவினா

1. செவியறிவுறூஉ துறையை விளக்குக.
2. தொன்மம் – விளக்கம் தருக.
3. அறிவுடை வேந்தனின்நெறி குறித்து, பிசிராந்தையார் கூறுவன யாவை?

### சிறுவினா

1.வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

2. எங்கிருந்தோ வருகிறது வண்ணத்துப்பூச்சியொன்று பறவைகளும் வரக் கூடும் நாளை – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

3. யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே – வமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.

### நெடுவினா

1. நிருவாக மேலாண்மை குறித்து வெ . இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

2. சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது? – விளக்குக.

**கலைச் சொல் அறிவோம்:**

Debit Card – பற்று அட்டை
Demand Draft – கேட்பு வரைவோலை
Withdrawal Slip – திரும்பப் பெறல் படிவம்
Teller – விரைவுக் காசாளர்
Mobile Banking – அலைபேசி வழி வங்கி முறை
Internet Banking – இணையவங்கி முறை

ஓர் அரசன் ஒரு நாளை எவ்வாறு ஒதுக்கிப் பணியாற்ற வேண்டும் என்பதற்கு 'மடியின்மை' என்னும் அதிகாரத்தின் வழியே திருவள்ளுவர் அட்டவணையே தருகிறார். புறநானூற்றின்

"வையகம் முழுவதும் வறிஞன் ஓம்பும் ஓர் செய் எனக் காத்து இனிதுஅரசு செய்கின்றான்"
(பாலகாண்டம்–179)

"இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக
வன்சொல் களைகட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனஓர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்"
(அறநெறிச்சாரம் – 16)



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# மருதம் அகாடமி Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

திணை: பாடாண்.

பாடாண் திணை - ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணையாகும்.

**உறுப்பிலக்கணம்**

அறிந்து = அறி + த் (ந்) + த் + உ

அறி – பகுதி; த் – சந்தி (ந் ஆனது விகாரம்);
த் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி.

அறுத்து = அறு + த் + த் + உ

அறு – பகுதி; த் – சந்தி; த் – இறந்தகால இடைநிலை;
உ – வினையெச்ச விகுதி.

இக்கல்வெட்டுகளை ஆராய்ந்த ஐராவதம் மகாதேவன் தன்னுடைய ஆய்வு நூலான 'எர்லி தமிழ் எபிகிராபி' யில் தெளிவுபடுத்துகிறார்.

தமிழ் மொழியை எழுதப் பயன்படுத்தப்பட்ட பழந்தமிழ் வரிவடிவத்தைத் தமிழ்ப் பிராம்மி என்றழைக்காமல் 'தமிழி' என்றோ அல்லது பழந்தமிழ் என்றோ அழைக்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறார்.

"1965ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3 ஆம் தேதியன்று மதுரைக்கு அருகில் உள்ள மாங்குளம் குகைக் கல்வெட்டுகள் (இயல் – 1 முகப்புப் படம்) சங்ககாலப் பாண்டிய மன்னாகிய நெடுஞ்செழியனுடையவை என்றும் அவை கி.மு. (பொ. ஆ.) 2ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்றும் கண்டுபிடித்தேன்".

– ஐராவதம் மகாதேவன்
நூற்றாண்டு மாணிக்கம், பக்.109

ஐராவதம் மகாதேவன் எழுதிய இக்கட்டுரை 'கல்வெட்டு' இதழில் வெளிவந்தது. இவர் இந்திய ஆட்சிப்பணி அலுவலராக இருந்து, தொல்லியலிலும் எழுத்தியலிலும் கொண்ட ஆர்வத்தால் விருப்ப ஓய்வு பெற்றார். தனக்கு மிகவும் விருப்பமான கல்வெட்டு ஆய்வில் 30 ஆண்டுகள் ஈடுபட்டார். சிந்துவெளி எழுத்துருவை ஆய்ந்து திராவிட எழுத்து என்று அவர் கண்ட முடிவு, வரலாற்றில் திருப்பத்தை ஏற்படுத்தியது. அவருடைய ஆய்வுகள் ஐந்திற்கும் மேற்பட்ட நூல்களாகவும் கட்டுரைகளாகவும் வெளிப்பட்டுள்ளன. ஆய்வுக்காக ஜவகர்லால் நேரு ஆய்வறிஞர் விருது (1970), இந்திய வரலாற்று ஆராய்ச்சி மைய விருது (1992), தாமரைத்திரு விருது (2009) ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளார். பதிற்றுப்பத்தில் இடம்பெற்ற சேர அரசர்களின் பெயர்கள் புகளூர்க் கல்வெட்டில் இடம்பெற்றுள்ளதை இவர் கண்டுபிடித்தது, இலக்கியத்தையும் கல்வெட்டாய்வையும் ஒருங்கிணைத்தது, பாறைகளிலிருந்த பழங்கல்வெட்டுகளைப் படியெடுத்து ஆய்வு நூலாக்கி இவர் தந்தது, இமயப் பணி.

## தொன்மம் – விளக்கம்

சில தொன்மங்கள், சமய நம்பிக்கைகளையும் சடங்குகளையும் வெளிச்சப்படுத்துகின்றன. இன்னும் சில தொன்மங்கள் உவமைக் கதைகளாகவும் மெய்யியல் உருவகங்களாகவும் நின்று சமுதாயத்திற்கு வழிகாட்டுகின்றன. தொன்மங்களை அறிவியல் முறையில் ஆய்வு செய்யவோ புரிந்துகொள்ளவோ முடியாது. அவை சமுதாயத்தின் ஆழ்மனத்திலிருந்து வெளிப்படுவனவாகவும் அவற்றினால் ஏற்படும் கூட்டமைப்பின் குறியீடுகளாகவும் விளங்குகின்றன என்று 'வெப்ஸ்டார்ஸ் தேர்டு நியூ இன்டர்நேஷனல் அகராதி' புலப்படுத்துகின்றது.

"முருகு உறழ் முன்பொடு
கடுஞ்சினம் செருக்கிப் பொருத யானை

(நற்றிணை, 225 : 1 – 2 )

**தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.**

1. வாழைக்காட்டில் குயில்கள் அலறிக்கொண்டும் காகங்கள் கூவிக்கொண்டும் இருந்தன.
2. முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான்.
3. கோவிந்தன் குடியிருக்க சுவர் கட்டி கூரை அமைத்தார்.
4. வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குட்டியும் யானைக்குட்டியும் கண்டேன்.
5. ஆட்டுத் தொழுவத்தைச் சுற்றிலும் எலிகள் பொந்துகள் அமைத்திருந்தன.
6. பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்.

**மருதம் அகாடமி Youtube channel**

**தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789**

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

## இயல் எட்டு

# இரட்சணிய யாத்திரிகம்

**- எச்.ஏ.கிருட்டிணனார்**

**இறை மகனின் எளிய நிலை**

**பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை என்னும் கொள்ளி**
**ஏதமில் கருணைப் பெம்மான் இருதயத்து ஊன்ற ஊன்ற**
**வேதனை உழந்து சிந்தை வெந்து புண்பட்டார் அல்லால்**
**நோதகச் சினந்தோர் மாற்ற நுவன்றிலர் கரும நோக்கி**

# சிறுபாணாற்றுப்படை

**- நத்தத்தனார்**

**இவர்களோடு நல்லியக் கோடன்.**

**....... என ஆங்கு**
**எழுசமங் கடந்த எழு உறழ் திணிதோள்**
**எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்**
**விரிகடல் வேலி வியலகம் விளங்க**
**ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள்**
...... (111-115)

பா வகை :நேரிசை ஆசிரியப்பா

### குறுவினா

1. குறியீட்டு உத்தியின் அடிப்படை இலக்கணங்களை எழுதுக.
2. 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' நூல் பற்றிக் குறிப்பு வரைக.
3. முகம் முகவரியற்றுப் போனதற்கு சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக

### சிறுவினா

1. கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப்படுத்துக.
2. 'ஈசன்மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்' – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

### நெடுவினா

1. எச். ஏ . கிருட்டிணனார் 'கிறித்தவக் கம்பரே ' என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.
2. கோடைமழை கதை வாயிலாகவிளக்கப்படும் மனித நேயப் பண்புகளை விளக்குக.

**கலைச் சொல் அறிவோம்:**

Stamp pad – மை பொதி
Stapler – கம்பி தைப்புக் கருவி
Folder – மடிப்புத்தாள் File – கோப்பு
Rubber Stamp – இழுவை முத்திரை
Eraser – அழிப்பான்

'கிறித்துவமும் தமிழும்' என்னும் நூலை மயிலையார் எழுதினார். இதுவே அவருடைய முதல் நூலாகும். தமிழின் தொல் இலக்கியம், தொல் கலை, தொல்லெழுத்து ஆகியவற்றில் கொண்ட ஈடுபாடு காரணமாக, 'பௌத்தமும் தமிழும்', 'சமணமும் தமிழும்' ஆகிய நூல்களை அவர் இயற்றினார். அச்சமயத்தார் தமிழுக்கு

சங்க காலத்துக்குப் பிற்பட்ட காலத்தில் தமிழகத்தைக் களப்பிரர்கள் என்ற மன்னர்கள் ஆட்சி புரிந்தனர். இக்காலம் தமிழர்களின் வரலாற்றில் இருண்ட காலம் என்று

ஆய்வுலகில் மயிலை சீனி. வேங்கடசாமியின் குறிப்பிடத்தக்க பங்களிப்பைக் கூற வேண்டுமானால் தமிழக வரலாற்றினைப் பல கோணங்களில் மீட்டுருவாக்கம் செய்ததைக் குறிப்பிடலாம். 'தமிழ்நாட்டு வரலாறு' என்னும் நூல் இவருடைய மீட்டுருவாக்க முயற்சிக்குச் சரியான சான்றாகும். சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம் முதலிய இலக்கியத் தரவுகளைக்கொண்டு இந்த நூலை எழுதியுள்ளார். அத்துடன் துளு மொழியையும் தமிழ்மொழியையும் ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார்.

மேற்கொண்டு வந்துள்ளார். 'செந்தமிழ்ச் செல்வி' என்னும் இதழில் அவர் எழுதிய சொல்லாய்வுக் கட்டுரைகள் 'அஞ்சிறைத் தும்பி' என்ற தொகுப்பாக வெளியிடப்பட்டது.

சேரன் கொடிக்கு வில், சோழன் கொடிக்கு புலி, பாண்டியன் கொடிக்கு மீன் என்று மரபான சின்னங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. மற்ற சின்னங்கள் பற்றிய குறிப்புகள் ஆய்வுலகு அறியாதவை. சங்ககாலப் பசும்பூண் பாண்டியன் தன் கொடியில் யானைச் சின்னத்தைக் கொண்டிருந்தான் என்ற செய்தி அகநானூற்றில் (162) இருப்பதை முதன் முதலில் அறிந்து வெளிப்படுத்தியவர் மயிலை சீனி. வேங்கடசாமி. இப்படி அவர் வெளிப்படுத்திய அரிய செய்திகள் பற்பல.

# மருதம் அகாடமி Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

## புணர்ச்சி விதி

முன்னுடை = முன்+உடை

விதி : 'தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்' – முன்ன் + உடை

விதி : 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' – முன்னுடை.

ஏழையென = ஏழை + என

விதி : 'இ ஈ ஐ வழி யவ்வும் – ஏழை + ய் + என

விதி : 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – ஏழையென.

---

திருநெல்வேலியில் இருந்து வெளிவந்த 'நற்போதகம்' எனும் ஆன்மீக மாத இதழில் இரட்சணிய யாத்திரிகம் பதின்மூன்று ஆண்டுகள் தொடராக வெளிவந்தது.

இரட்சணிய யாத்திரிகம், 1894ஆம் ஆண்டு மே திங்களில் முதல் பதிப்பாக வெளியிடப்பட்டது.

---

ஜான் பன்யன் என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய பில்கிரிம்ஸ் புரோகிரஸ் (Pilgrims Progress) எனும் ஆங்கில நூலின் தழுவலாக இரட்சணிய யாத்திரிகம் படைக்கப்பட்டது. இது 3766 பாடல்களைக் கொண்ட ஒரு பெரும் உருவகக் காப்பியம். இது ஆதி பருவம், குமார பருவம், நிதான பருவம், ஆரணிய பருவம், இரட்சணிய பருவம் ஆகிய ஐந்து பருவங்களைக் கொண்டது. இக்காப்பியத்தின் குமார பருவத்தில் உள்ள இரட்சணிய சரித படலத்தில் இடம்பெறும் இயேசுவின் இறுதிக்கால நிகழ்ச்சிகள் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளன. இதன் ஆசிரியர் எச்.ஏ. கிருட்டிணனார். பிற சமய இலக்கியங்களைப் போலவே கிறித்துவ சமய இலக்கியங்களும் தமிழ் இலக்கிய வளமைக்குப் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளன. எச்.ஏ. கிருட்டிணனார் போற்றித் திருஅகவல், இரட்சணிய மனோகரம் முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார். இவரைக் கிறித்துவக் கம்பர் என்று போற்றுவர்.

---

**கடையெழு வள்ளல்களும் – ஆண்ட நாடுகளும்**

பேகனின் ஊரான ஆவினன்குடி 'பொதினி' என்றழைக்கப்பட்டு, தற்போது பழனி எனப்படுகிறது. பழனி மலையும் அதைச் சுற்றிய மலைப்பகுதிகளும் பேகனது நாடாகும்.

பாரியின் நாடு பறம்பு மலையும், அதைச் சூழ்ந்திருந்த முந்நூறு ஊர்களும் ஆகும். பறம்பு மலையே பிறம்பு மலையாகி, தற்போது பிரான்மலை எனப்படுகிறது. இம்மலை சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்தில் சிங்கம்புணரிக்கு அருகில் உள்ளது.

காரியின் நாடு (மலையமான் திருமுடிக்காரி) மலையமான் நாடு என்பதாகும். இது மருவி 'மலாடு' எனப்பட்டது. இது விழுப்புரம் மாவட்டம் தென்பெண்ணை ஆற்றங்கரையில் அமைந்துள்ள திருக்கோவிலூரும் (திருக்கோயிலூர்) அதைச் சூழ்ந்துள்ள பகுதிகளுமாகும்.

ஆய் நாடு (ஆய் அண்டிரன்) – பொதிய மலை எனப்படும் மலை நாட்டுப் பகுதியாகும். தற்போது அகத்தியர் மலை என்றும் அழைக்கப்படுகிறது. இது திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்துள்ள குற்றாலம், பாபநாசம் ஆகிய மலைப்பகுதிகளும் அதைச் சூழ்ந்துள்ள பகுதிகளுமாகும்.

அதியமான் நாடு (அதிகமான் நெடுமான் அஞ்சி) 'தகடூர்' என்றழைக்கப்பட்ட தருமபுரியைத் தலைநகராகக் கொண்டு விளங்கிய பகுதி. இப்பகுதியில் உள்ள 'பூரிக்கல்' மலைப்பகுதியில் இருந்து பறித்து வந்த நெல்லிக்கனியையே ஔவையாருக்கு அதிகமான் கொடுத்ததாகக் கூறப்படுகிறது.

நள்ளியின் நாடு (நளிமலை நாடன்) நெடுங்கோடு மலை முகடு என்றழைக்கப்பட்ட பகுதி. தற்போது உதகமண்டலம் 'ஊட்டி' என்று கூறப்படுகிறது.

ஓரியின் நாடு (வல்வில் ஓரி) – நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 'கொல்லி மலையும்' அதைச் சூழ்ந்துள்ள பல ஊர்களும் ஆகும்.

ஓய்மா நாட்டு நல்லியக்கோடனது நாடு திண்டிவனத்தைச் சார்ந்தது ஓய்மா நாடு என அழைக்கப்பட்ட நிலப்பகுதி ஆகும்.

---

## புணர்ச்சி விதி

நன்மொழி = நன்மை + மொழி

விதி : 'ஈறுபோதல்' – 'நன்மொழி'.

உரனுடை = உரன் + உடை

விதி : 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' – 'உரனுடை'.

---

## உறுப்பிலக்கணம்

ஈந்த = ஈ + த்(ந்) + த் + அ

ஈ – பகுதி; த் – சந்தி ('ந்' ஆனது விகாரம்); த் – இறந்தகால இடைநிலை; அ – பெயரெச்ச விகுதி

அமர்ந்தனன் = அமர் + த்(ந்) + த் + அன் + அன்

அமர் – பகுதி; த் – சந்தி ('ந்' ஆனது விகாரம்); த் – இறந்தகால இடைநிலை; அன் – சாரியை; அன் – ஆண்பால் வினைமுற்று விகுதி

தாங்கிய = தாங்கு + இ(ன்) + ய் + அ

தாங்கு – பகுதி; இ(ன்) – இறந்தகால இடைநிலை; ய் – உடம்படுமெய் சந்தி; அ – பெயரெச்ச விகுதி

---

சாந்தா தத் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த பெண்படைப்பாளர். அமுதசுரபியில் வெளியான 'கோடை மழை' என்னும் இச்சிறுகதை 'இலக்கியச் சிந்தனை' அமைப்பின் சிறந்த சிறுகதைக்கான விருதைப் பெற்றது. இவர் தற்போது ஹைதராபாத்தில் வசிக்கிறார். சிறுகதை, கட்டுரை, மொழிபெயர்ப்பு என இலக்கியத் துறைக்குத் தன் பங்களிப்பைச் செய்து வருகிறார். பல விருதுகளைப் பெற்றுள்ள இவர் ஹைதராபாத்தில் வெளியாகும் 'நிறை' மாத இதழின் ஆசிரியராக உள்ளார். 'திசை எட்டும்' என்ற மொழிபெயர்ப்பு இதழின் ஆசிரியர் குழுவில் உள்ளார். இவருடைய மொழிபெயர்ப்புகளைச் சாகித்திய அகாதெமி வெளியிட்டுள்ளது. மனித நேயம் இவர் கதைகளில் வெளிப்படும் அடிப்படைப் பண்பாகும்.

---

முதல் இப்பயன்பாட்டை அறிய முடிகிறது. சங்க இலக்கியத்தில், அகத்திணை மாந்தர்களின் உள்ளத்துஉணர்வுகளைக் குறிப்பாகஉணர்த்தும் குறியீடுகள், 'உள்ளுறை உவமம்' என்ற முதிர்ந்த குறிப்புப் பொருள் உத்தியில் இடம்பெற்றுள்ளன. தமிழின் செல்வாக்கினாலேயே வடமொழியில் குறிப்புப் பொருள் கோட்பாடு உருவானது என்று ஹார்ட் குறிப்பிட்டிருக்கிறார். இந்தக் குறியீட்டு மரபு இன்றைய புதுக்கவிதைகளில் மிகுதியாகக் காணப்படுகின்றது.

மருதம் அகாடமி Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

## திட்டம்

வரங்கள்
சாபங்கள்
ஆகுமென்றால் இங்கே
தவங்கள் எதற்காக? – (அப்துல்ரகுமான்)

## வியர்வை

இந்த
ஆதிரைப் பருக்கைகள்
வீழ்ந்ததும்
பூமிப்பாத்திரம்
அமுதசுரபி – (பால்வீதி, அப்துல் ரகுமான்)

குறியீடு என்பது ஒரு புதிய வடிவம் அன்று. சங்க இலக்கியப் பாடல்களில் வரும் உள்ளுறை உவமம் என்னும் இலக்கிய உத்தியும் இன்றைக்குக் குறியீடு என்று நாம் குறிப்பிடும் உத்தியும் ஒன்றுதான். சங்ககாலந்தொட்டே தமிழர்க்குக் குறியீட்டுச் சிந்தனை இருந்ததை நம்மால் அறியமுடிகிறது. உள்ளுறை உவமம் அக இலக்கியங்களில் உரைக்க முடியாதவை, மறைக்கவேண்டுபவை ஆகியவற்றைக் குறிப்பாக உணர்த்தப் பயன்பட்டது. குறியீடு என்பது அகம், புறம் என எல்லா வகைக் கவிதைகளிலும் குறிப்பாக உணர்த்தப் பயன்படும் இலக்கிய உத்தியாகும்

தமிழாக்கம் தருக.

*I make sure I have the basic good habits which include respecting my elders, greeting people when I meet them, wishing them well when departing etc. Other than this, observing the law, serving the poor and downtrodden, helping the sick and needy, giving shelter to the homeless, assisting someone with a physically challenged etc. are also other good habits of mine. To lead on a peaceful life, I develop other good habits, writing, listening to music, dancing, singing etc. are other such habits which fulfill the needs of my soul.*

## இலக்கிய நயம் பாராட்டுக.

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பார்
கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்.
தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்
செங்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுகும்.
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே.
– திரிகூட ராசப்பக் கவிராயர்

மருதம் அகாடமி Youtube channel
தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789
Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

மருதம் அகாடமி YouTube Channel 9659838789



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com